**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி நகர பிதாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ராஜகிரிய வான்பாலம் நிர்மாணிப்பதற்காக சபைக்குரிய காணியில் 0.32 ஹெக்டேயர் அளவை வழங்கியதற்காக சபைக்கு அறவிட வேண்டிய பெறுமதி மதிப்பீட்டு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அறநெறிப் பாடசாலைகளுக்காக 2017 நவம்பர் மாதத்தில் பால் வழங்குவதற்காக தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 426,960 தொகை கணக்கீடு செய்யப்படாமையினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஒபேசகரபுர விளையாட்டரங்கில் 2017 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை செலுத்த வேண்டிய ரூபா 86,341 தொகையான மின்சாரப்பட்டியல் கணக்கு வைக்கப்படாமையினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன் கொடுத்தோர் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு உள்நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் உள்ளுராட்சி அமைச்சிலிருந்து 2016 நவம்பர் 13 ஆந் திகதி சபைக்குக் கிடைத்த கழிவுப்பொருட்கள் அகற்றும் 08 வாகனங்கள் மற்றும் 06 உதிரிப்பாகங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 270,000 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மற்றும் செலவினங்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நூலகப் புத்தக மெய்மையாய்வின் பிரகாரம் சபைக்குரிய 04 நூலகங்களில் பழுதடைந்த மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற ரூபா 2,298,285 பெறுமதியான புத்தகங்கள் கணக்கிலிருந்து அகற்றப்படாமையின் காரணமாக இறுதியிருப்பு மற்றும் ஆண்டின் மிகை என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபையின் வெளித்தரப்பினருக்கு எதிராக ரூபா 4,020,000 தொகையான நட்டமொன்று கோரிய வழக்கொன்று உட்பட 17 வழக்குகளும், சபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் ரூபா 348,000,000 இழப்பீடு கோரி தொடரப்பட்ட 25 வழக்குகளும் நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெற வேண்டிய கணக்குகள்**

(அ) உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து சபைக்குக் கிடைக்க வேண்டிய களியாட்ட வரி ரூபா 2,781,680 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 188,042 தொகையான பெறவேண்டிய உத்தியோகபூர்வ வீட்டு வாடகை மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 86,210 கூட்டுத்தொகையான 09 நிலுவை மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

மேல் மாகாண அமைச்சில் சேவையாற்றி 2017 யூலை 20 ஆந் திகதி சபையில் வேலையைக் கையேற்ற நகர ஆணையாளருக்கு அமைச்சில் சேவையாற்றிய 2013 நவம்பர் முதல் 2017 யூலை வரை நிலுவை சம்பளமாக சபையிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 259,276 தொகை 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 84,876,210 தொகையான நிலுவை ஆதனவரி மீதி தொடர்பாக விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டம் | | |
| (i) 130 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற சகல வகையான கழிவுப்பொருட்களும், சபையின் சொத்தொன்றாக இருக்க வேண்டியதுடன் அந்த சகல கழிவுப்பொருட்களையும் விற்பனை செய்வதன் மூலம் பெறப்படுகின்ற பணம் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப் பொருள் வருமானம் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 251(அ)(2) ஆம் பிரிவு | 198,558,513 | சபைக்கு அறவிட வேண்டிய சகல அறவீடுகளும் அறவிடப்பட்டு சபையின் நிதியங்களுக்கு செலவு வைப்பதற்காக தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் நகர ஆணையாளரின் பணியாக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | - | ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சகல அசைவுறாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் 07 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | 260,135 | வழங்கப்பட்ட முற்பணம், வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டியிருந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போதிலும், தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று காணப்பட்டது. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 571 | 7,707,367 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை இனங்கண்டு / விசாரணை செய்து வருமானத்திற்கு எடுக்க வேண்டிய போதிலும், 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 751 | - | பிரதான களஞ்சியத்திலிருந்து மொறகஸ்முல்ல, பண்டாரநாயக்கபுற வைத்திய நிலையம் மற்றும் பல் வைத்திய நிலையம் என்பவற்றுக்காக விநியோகிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் பொருட் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | நிதிப்பிரமாணம் 772(1) | - | ஆண்டிற்குரியதாக அகற்றப்பட வேண்டுமென பிரதான களஞ்சியத்திலிருந்து சிபாரிசு செய்யப்பட்ட 05 பொருள் வகைகளுக்குரிய 08 பொருட்கள் மற்றும் இரண்டு பொருள் இருப்புக்கள் என்பவற்றை அகற்றுவதற்கும், அந்த பொருட்களை அழிவடையச் செய்வதற்கும் 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | நிதிப்பிரமாணம் 1645 | - | நகர பொறியிலாளர், வைத்திய உத்தியோகத்தர் மற்றும் சட்டத்தரணிகள் என்போர்களின் பாவனைக்காக சபையினால் வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கான ஓட்ட அட்டவணை நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. |
| (ஈ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 மற்றும் 8.9.2 ஆம் வழிகாட்டி | | 5,535,500 | 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,535,500 பெறுமதியான 500 தார் பரல்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக சபையினால் வழங்குனருடன் முறையான உடன்படிக்கையோ அல்லது முறையான மீள் நடவடிக்கைக் கடிதமோ எழுதி கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |

(உ) சுற்றறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | சபையின் வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2016 யூலை 11 ஆந் திகதிய LGD/8/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | - | சபைக்குரிய வெலிக்கட பொலிஸ் அருகிலுள்ள காணியொன்று வாகனத் தரிப்பிடத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இரு தரப்பினருக்கிடையே எழுத்து மூல சட்டரீதியான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படவில்லை. |
| (iii) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | 03 வருடங்களுக்கு ஒரு தடவை கடை வாடகை மதிப்பீடு திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நீண்ட காலமாக கடை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | 11,292,851 | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 10,000,00 தொகை அங்கீகாரமின்றி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் காசுக் கணக்கில் ரூபா 1,292,851 மீதியொன்று விளைவற்றுக் காணப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 248,629,914 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 663,783,644 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 116,513 பெறுமதியான 36 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 186(4)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 212,000,000 | 238,345,909 | 243,444,275 | 87,657,889 | 208,925,000 | 241,757,389 | 231,422,931 | 97,915,454 |
| வாடகை | 57,609,000 | 29,283,412 | 29,618,519 | 4,541,197 | 37,340,000 | 26,052,637 | 26,435,504 | 5,092,955 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,961,000 | 6,236,406 | 6,236,406 | - | 7,685,000 | 4,502,307 | 4,500,057 | - |
| ஏனைய வருமானம் | 368,458,000 | 334,748,201 | 334,461,957 | 1,074,055 | 288,609,000 | 716,177,877 | 715,689,246 | 600,000 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் ரூபா 3,952,452 தொகையான ஆதனவரி பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 319 வியாபாரங்களிலிருந்து ரூபா 874,000 தொகையான வியாபார வரிவருமானமொன்றும் 209 வியாபாரங்களிலிருந்து ரூபா 448,500 தொகையான வியாபார அனுமதிப்பத்திர வருமானமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுகேகொட மக்கள் சந்தையில் 110 பக்கி கடைகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 720,000 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடம் முதல் 04 வருடம் வரையான காலவீச்சில் 40 பக்கி கடைகளில் நிலுவையாக இருந்த வாடகை ரூபா 623,000 ஆகும்.

(ஆ) தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சபையினால் குறிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வ விடுதிகளில் வாடகை அறவிடப்படாமையினால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 39,240 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதிகளின் வாடகையாக உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12 ½ சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கின்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து பொருளாதார வாடகையொன்று அறவிடப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 இல் ரூபா 175,176 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

## 2.4 மிகைக் கட்டணம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 226(1) ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட 14 மிகைக் கட்டண சான்றிதழ்களுக்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 25,550,166 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) கைவிடப்பட்ட இலக்குகள்

மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 1,955,502 பெறுமதியான 04 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

### (ஆ) செயற்திட்டங்களின் தாமதம்

#### (i) அங்கம்பிட்டிய வீடமைப்புத்தொகுதி நிர்மாணம்

சபையினால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 48.320,909 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி வீடமைப்புத் தொகுதி, 2016 ஆம் ஆண்டு வரையிலும், சுவர் மற்றும் ஸ்லெப் தட்டு என்பன வெடித்துக் காணப்பட்டதாக குடியிருப்பாளர்களால் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சபையினால் அந்த குடியிருப்பாளர்கள் அக்கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு, தற்காலிக குடியிருப்பு இடங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 991,405 தொகை செலவிடப்பட்ட போதும், 2018 ஆகஸ்ட் வரையிலும் கட்டிடத்தை மீள்நிர்மாணம் செய்து குடியிருப்பாளர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் தனது அதிகாரப்பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்கு காபட் இடல், முற்கலவைக் கற்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்தல், மீண்டும் தாரிடல் போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 20,786,948 தொகையான 09 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் வீதி மற்றும் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 500,000,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின்போது சபை நிதியத்திலிருந்து எந்தவொரு அபிவிருத்திச் செயற்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பொதுப் பயன்பாடுகள் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 9,600,000 தொகையான 02 செயற்திட்டங்கள் தொடர்பாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளின் 18(1)ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுகின்ற நிதிக்கு மேலதிகமாக கழிவுப்பொருள் செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்காக வீட்டு உரிமையாளரினால் பயன்பாட்டுக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு கடப்பாடுடையவர்கள் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளிலிருந்து அவ்வாறான கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கை தயாரித்தல், மீளாய்வு செய்தல் அல்லது மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்தந்த பிரிவுகளுக்குரிய உக்கும் மற்றும் உக்காத கழிவுப்பொருட்களை வேறுபிரித்து சேகரித்தல் குறித்தகால அட்டவணையின் பிரகாரம் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கழிவுப்பொருள் முகாமைத்துவ முறைப்படுத்தலின் கீழ் LGD/03/2017 ஆம் இலக்க 2017 மே மாத சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களால் சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுப்பொருட்களும் நூற்றுக்கு 100 சதவீதம் வகைப்படுத்தப்பட்டு கையேற்றல் கட்டாயமாக இடம்பெற வேண்டியிருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரித்தல் தொடர்பாக அவ்வாறான ஒழுங்கு முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) சபை அதிகாரப்பிரதேசத்தில் இலக்கம் 6, 7, 8, 9 மற்றும் 10 என்ற பிரிவுகளில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சபையினால் தனியார் நிறுவனமொன்றுடன் 2017 மார்ச் 28 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போது அதற்காக ரூபா 97,059,268 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- உடன்படிக்கையின் 4 மற்றும் 5 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விதாரரினால் உரிய பிரிவுகளில் கழிவுகள் தெரிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

- உடன்படிக்கையின் 17 ஆவது பிரிவின் பிரகாரம் வீதிகளில் புற்பிடிகள் கழன்றிருந்தமை அல்லது தெரிவுப் பரிசோதனை செய்தமை அல்லது மேற்பார்வையாளரால் உறுதிப்படுத்தப்படாதிருந்த போதும் அதற்காக மாதமொன்றுக்கு ரூபா 979,300 வீதம் ஆண்டிற்காக ரூபா 11,661,572 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறாக அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 இன் நிகழ்ச்சி நிரல் நிரல் தொடர்பாக சபை அறிந்திராமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

**(அ) "அசிறிமத் கோட்டே" நூல் அச்சிடல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,825,375 தொகை செலவில் அச்சிடப்பட்ட "அசிறிமத் கோட்டே" என்ற பெயருடைய நூலில் 4,000 பிரதிகளில் 3891 பிரதிகள் சபைக்குக் கிடைத்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 13 இல் உள்ளவாறு 3216 பிரதிகள் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ii) 3216 நூற்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தமையால் நூற்களை அச்சிடும் நோக்கமான சபையினால் காண்பிக்கப்பட்ட பிரகாரம் "கோட்டே வரறாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ விபுத்திய நாடு முழுவதுமான பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களைப் போல ஒட்டுமொத்த நல்லெண்ண அடிப்படையிலான மக்களுக்கிடையே கொண்டுவரப்பட்ட கோட்டே வரலாற்று சிறப்புக்களை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக" என்ற மிக முக்கியமான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்கு கிடைக்கப்பெற்ற 3891 புத்தகங்கள் வெளித்தரப்பினருக்கு விநியோகிக்கப்பட்ட 30 நூற்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 51,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2015 சனவரி அந்த புத்தகங்களை மேவுகை செய்வதற்காக ரூபா 113,700 பெறுமதியான 1561 மேவுகை உறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் வரையிலும் அதில் 977 உறைகள் களங்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) பாடசாலை மாணவர்களுக்காக புத்தகங்களை பகிர்ந்தளித்தல்**

2016 ஆம் கல்வியாண்டிற்காக பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 192,746 பெறுமதியான 7135 பயிற்சிப் புத்தகங்கள் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

**(இ) 60 வத்த தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி நெறி**

60 வத்த தொழில் பயிற்சி நிலையத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற தையல் பாடநெறிகளுக்கு 26 பயிலுனர்கள் பங்குபற்றுகின்ற போதிலும், ஒரு தையல் இயந்திரம் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேலும், பாடநெறிக்கான பாடங்கள் சிபாரிசு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்காக நியாயமான / செயல்முறை மதிப்பீடொன்று மேற்கொண்டு சான்றிதழ் விநியோகிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(ஈ) சபைக்குச் சொந்தமான காணியின் எல்லையில் வாயிற்கதவொன்று நிர்மாணித்தல்**

ராஜகிரிய பொலிஸிற்கு அருகிலுள்ள சபையின் வளவில் மேற்கு எல்லையில் தனியார் வியாபார நிலையத்திற்கு உள்நுழைவதற்கான பிரதான நுழைவு வீதி காணப்படும் போது, உப வீதியொன்றாக சபைக்குச் சொந்தமான காணியின் எல்லையில் வாயிற் கதவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக சபையினால் எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 19 | 13 | 06 | - |
| இரண்டாம் நிலை | 178 | 195 | 28 | 45 |
| ஆரம்ப நிலை | 770 | 741 | 29 | - |
| ஏனையவை | 06 | 03 | 03 | - |
| | 973 | 952 | 66 | 45 |

(i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 04 தாதி உத்தியோகத்தர்களும், 04 மருந்தாளர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மொறகஸ்முல்ல வைத்திய நிலையத்தில் மருந்து விநியோகிக்கும் பணிகள் தொழிலாளர் சேவைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) சபையின் சாரதியொருவர் 2016 ஆகஸ்ட் முதல் பிரதம அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அத்திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவரின் சம்பளம் மற்றும் மேலதிக நேரப்படியாக ரூபா 669,955 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

(i) பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 3,113,569 ஆக இருந்ததுடன், ஊழியர் வகை வெளிப்படுத்தப்படாத ரூபா 113,536 தொகையான கடன் மீதியொன்று காணப்பட்டது.

(ii) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,786,633 தொகையான இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதியொன்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நீர்க்குழாய் இணைப்பிற்காக 475 வீதி உடைப்புக்களுக்காக 2017 சனவரி முதல் திசெம்பர் வரை பொது மக்களிடமிருந்து ரூபா 4,238,931 தொகையான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வீதியின் சேதத்தை துரிதமாக நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் சனவரி முதல் நவம்பர் வரையான 11 மாத காலத்தில் கலிபவுசர் சேவை மூலம் ரூபா 1,129,044 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக சபையினால் ரூபா 3,371,359 செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கலிபவுசர் சேவை நடாத்திச் செல்வதன் மூலம் ரூபா 2,242,315 அசாதாரண நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் 10 பிரிவுகளிலிருந்து அறவிட வேண்டிய கழிவுப்பொருள் வரி ரூபா 7,191,550 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) மொறகஸ்முல்ல வைத்திய நிலையத்தில் ரூபா 115,625 பெறுமதியான 03 உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 1994 ஆம் ஆண்டின் போது 25 மாணவர்களுக்கு போதுமான பிரகாரம் வெலிகட பகல் காப்பாக நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் இதுவரையிலும் கைவிடப்பட்டிருந்தது.

**3.5.2 வாகனப் பயன்பாடு**

(அ) உடைந்த நிலையிலும், பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையிலும் காணப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட விலை ரூபா 8,972,020 தொகையான 07 வாகனங்களை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குழாத்தில் காணப்பட்ட கெப் வண்டியொன்று மாதத்தில் அதிக எண்ணிக்கையான நாட்கள் சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகத்தர்கள் அந்த வாகனத்தை தம்மால் ஓட்டுவதற்காக அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 22/99 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க உத்தியோகத்தரல்லாத 05 நடுக்கட்டல் உத்தியோகத்தர்களுக்காக 2017 ஏப்ரல் 20 ஆந் திகதி ரூபா 10,000 வீதம் விழா முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) சபைக்குரிய 04 நூலகங்களில் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் புத்தக மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,077,715 தொகையான காணாமல் போன புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜனக றணவக்க விளையாட்டரங்கில் 2017 ஆம் ஆண்டின் மின்சாரப் பட்டியலைச் செலுத்தும் போது தாமதக் கட்டணமாக ரூபா 4,836 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.8 பெறுகைகள்

### 3.8.1 பெறுகைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத்திட்டம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2006 மார்ச் 24 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.8.2 ஒப்பந்த நிர்வாகம்

### 3.8.2.1 ஜனஜயசிட்டி செயற்திட்டம்

சபையினால் ரூபா 1,687,986,224 ஒப்பந்தப் பெறுமதியில் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை செய்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,718,951,057 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்தக் கொடுப்பனவில் உள்ளடங்கியுள்ள ரூபா 30,964,834 தொகையான எதிர்பாராத மற்றும் மேலதிக வேலை தொடர்பாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரருக்கு செலுத்துதலின் தாமதத்தினால் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியமைக்காக விதிக்கப்பட்ட வட்டிக் கட்டணம் மற்றும் மேலதிக கிரயம் ரூபா 132,719,730 தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தகாரரால் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2.2 ஜயறஜசிட்டி செயற்திட்டம்

சபையினால் ரூபா 619,276,616 பெறுமதியில் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருடன் 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ரூபா 27,867,447 தொகையில் மதியுரைக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது அதன் கட்டமைப்புத் திட்டத்தில் காணப்பட்ட வழுவின் காரணமாக அடித்தளமும் சுவரும் வெடித்திருந்தமையால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், மதியுரைக் கம்பனிக்கு மொத்த கட்டணத்தில் 95 சதவீதமான ரூபா 26,381,183 தொகை மற்றும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 26,974,201 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. திட்டத்தை மாற்றுவதற்கும், செயற்திட்டத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் மதியுரைச்

சேவைகளுக்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபா 1,373,000 தொகை செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தைக் கைவிட்டிருந்தார்.

**3.8.2.3 வெலிக்கட பொலிஸ் அருகிலுள்ள காணியில் புதிய நகர சபை அலுவலகக் கட்டிட நிர்மாணம்**

---

2013 மே 28 ஆந் திகதிய சபை அங்கீகாரத்தின் பிரகாரம் வெலிக்கட பொலிஸ் அருகில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் புதிய நகர சபை அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்குரிய நில வடிவமைப்பு நடவடிக்கைகளுக்கான மதியுரைச் சேவைக்காக ரூபா 36,010,657 கட்டணம் ஒன்றின் கீழ் மதியுரைக் கம்பனியுடன் 2015 சனவரி 26 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனிக்கு ரூபா 22,220,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 மே 07 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட நிர்மாணங்கள் தற்போது காணப்படுகின்ற சபை வளவில் நிர்மாணிப்பதற்காக மதியுரைக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 4,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் அறவிட வேண்டிய ரூபா 15,138,788 தொகையினை அறவிடுவதற்கான மதியுரைக் கம்பனியால் சபைக்கு எதிராக பிணக்குகளைத் தீர்க்கும் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்ததுடன் அதற்கான வழக்குக் கட்டணமாக ரூபா 259,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதனால் இந்த ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 26,479,340 தொகை பொருளாதார மற்றும் ஆக்கபூர்வமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது.

**3.8.2.4 மொறகஸ்முல்ல 4 ஆவது ஒழுங்கையில் சிகிச்சை நிலையக் கட்டிடம் அகற்றப்பட்டு மாடிவீட்டுத் தொகுதி நிர்மாணம்**

---

சபைக்குரிய மொறகஸ்முல்ல 4 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள காணியொன்றில் காணப்பட்ட பழைய கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு 18 வீட்டு அலகுகளையுடைய நான்கு மாடி வீட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 69,704,581 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் 2016 யூன் 01 ஆந் திகதி தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 16 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர் வேலைத்தளத்தைக் கைவிட்டுச் சென்றிருந்தார். 2017 யூலை 31 ஆந் திகதி வரையில் சபை ஒப்பந்தகாரருக்கு ரூபா 25,511,312 தொகை செலுத்தியிருந்ததுடன் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றிய மரக்கம்பங்கள், கூரைத் தகரம் மற்றும் கதவு, யன்னல் போன்ற பொருட்கள் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.2.5 கோமஸ் கார்டின் புதிய உடற்பயிற்சி நிலையத்துடன் இரண்டு மாடிக் கட்டிட நிர்மாணம்**

---

சபைக்குரிய ஒபேசேகரபுற கோமஸ் கார்டின் உடற்பயிற்சி நிலையத்திற்காக 1493 சதுர அடியான இருமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 சனவரி 19 ஆந் திகதி ரூபா 10,087,049 வரியுடனான பெறுமதியில் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருடன் 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 228 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் சபை பொது இலட்சனை முத்திரையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 227 இன் பிரகாரம் ஏதாவது வேலையொன்றைச் செய்தல் அல்லது சேவையொன்றை நிறைவேற்றுவதற்காக ஏதாவது உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அதற்குத் தேவையான நிதி பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படுமாயின் மாத்திரம் முடியுமாக இருந்த போதிலும், மேற்கூறப்பட்ட

நிர்மாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் 2014 இன் பாதீட்டில் உள்ளடக்கி தேவையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் முழுமையான பெறுகை நடைமுறைகள் தொடர்பாக சரியான கவனமின்றி செயற்பட்டதன் காரணமாக அருகிலுள்ள குடியிருப்பாளர்களின் எதிர்ப்பு எழுந்திருந்தமையால் ஆரம்பத் திட்டத்திற்கு இணங்கும் வகையில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முடியாமையினால் பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் ஆரம்பத் திட்டத்திற்குப் புறம்பாக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக திருத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1,025 சதுர அடி நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்திற்காக சபையினால் 2016 யூன் 28 ஆந் திகதியில் ரூபா 5,846,632 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கட்டிட நிர்மாணத்தின் போது ஒரு சதுர அடிக்கு ரூபா 5,702 என்ற மிகவும் கூடிய கிரயமொன்று செலவிடப்பட்டிருந்த போதும், 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கட்டிடத்தின் கீழ் மாடியில் பக்கச் சுவரில் நீர்க்கசிவு ஏற்பட்டமையால் அதன் பூச்சுக்கள் கழன்று காணப்பட்டது.

(ஊ) மேற்கூறப்பட்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணி சபைக்குரிய ஆதனமொன்றாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.8.2.6 நாணயக்கார மாவத்தையில் நகர சபை வேலைப்பிரிவு, வாகன பராமரிப்புப் பிரிவு மற்றும் களஞ்சியத் தொகுதி கட்டிட நிர்மாணம்**

---

2014 சனவரி 21 ஆந் திகதிய நிதி தொடர்பான நிலையியற் குழு 30:41 பரிந்துரை மற்றும் 2014 சனவரி 31 ஆந் திகதிய பொதுக்கூட்ட தீர்மான இல.6 என்பவற்றின் பிரகாரம் ரூபா 46,973,698 இற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் இக்டாட் நிறுவனத்தின் C-5 தரத்தில் தகைமை பெற்ற நிறுவனமொன்று என உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7:10(அ) இன் பிரகாரம் கேள்விதாரரின் பின் தகைமைகளைப் பரீட்சித்தல் மற்றும் ஒப்பந்தத்தை ஆக்கபூர்வமாக நிறைவேற்றும் இயலுமை மற்றும் வளங்கள் உள்ளது என சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(இ) ஒப்பந்தக்காரரால் 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி உக்குவல சணச வங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 2,348,653 தொகையான செயலாற்றல் பிணை முறியை சபை ஏற்றுக்கொண்டிருந்த போதிலும், அந்த வங்கி இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றாகக் காணப்படவில்லை.

(ஈ) அத்திவார நிர்மாண மட்டத்தின் போது கட்டிட திட்டத்தில் உள்ளடக்கப்படாத வேலைகளுக்கான மதிப்பீட்டு கிரயத்தை விஞ்சி ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 2,576,329 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2015 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையில் ஒப்பந்தகாரருக்கு 20 சதவீத முற்பணம் மற்றும் அத்திகதியில் செய்யப்பட்ட வேலை அளவிற்காக ரூபா 17,651,987 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது வேலைத்தளம் கைவிடப்பட்டிருந்தது. அத்திகதியில்

சபையினால் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 6,183,416 ஆகும்.

(ஊ) வேலைத் தளத்தை கைவிட்ட திகதியான 2015 பெப்ரவரி 12 ஆந் திகதி அளவில் ஒப்பந்தகாரரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 11,743,270 தொகையான 02 வங்கிப் பிணை முறிகள் காலாவதியாவதற்கு இன்னும் 04 மாத காலம் காணப்பட்ட போதிலும் சபையினால் அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இதுவரையில் இந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 17,651,987 தொகை பயனற்ற செலவினம் ஒன்றுக்கு உள்ளாகி இருந்தது.

### 3.8.2.7 நுகேகொட கங்கொடவில சுபத்ராறாம அத்துல றஜமஹா விகாரைக்குரிய காணியில் வாசிப்பு மண்டபத்துடன் சேவை கொட்டகை ஒன்றை நிர்மாணித்தல்

நுகேகொட கங்கொடவில சுபத்திராறாம அத்துல ரஜமஹா விகாரைக்குரிய 24.35 பேர்ச் அளவான காணியில் வாசிப்பு மண்டபத்துடன் சேவைக் கொட்டகை ஒன்றை நிர்மாணிப்பதற்காக சபையினால் 2015 மார்ச் 15 முதல் 2050 மார்ச் 14 ஆந் திகதி வரை 35 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2015 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 1,680,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணியில் சனசமூக நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 17,272,350 தொகையில் 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்தக் காணியில் மண் பரிசோதனைக்காக 2015 நவம்பர் 26 ஆந் திகதி ரூபா 273,615 தொகை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அளவில் நிர்மாணங்கள் கைவிடப்பட்டமையினால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,953,615 தொகை பயனற்ற செலவினத்திற்கு உள்ளாகி இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன வருமான செலவினங்களை, உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 78 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 33,822,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 97 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 611,118,000 தொகையில் செலவிடப்படாத பெறுமதி ரூபா 551,227,157 ஆகும்.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதிலளிக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 5,846,632 பெறுமதியான கணக்காய்வு ஐய வினாவிற்காக இதுவரையும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நகர ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கு வைக்கப்படாமை. |
| | (ii) கணக்குகளிலிருந்து கைவிடல் மற்றும் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டமை |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | போதியளவான இருப்பு பேணப்படாமை, |
| (இ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை சேகரித்தல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) வரி மதிப்பீடு இடம்பெறாமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | கைவிடல் மற்றும் தாமதமாக்கப்பட்டமை. |
| (உ) உள்ளகக் கணக்காய்வு | நிர்மாண செயற்திட்டம் மற்றும் கொள்வனவுகள் கணக்காய்வு செய்யப்படாமை. |